Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 4 நவம்பர் 2021

**மைலோ தனது 'மீண்டும் பள்ளிக்கு' (Back to School) நிகழ்ச்சித்திட்டத்துடன் சிறுவர்களை வரவேற்கிறது**

நெஸ்லே நிறுவனத்தின் உற்பத்தியான மைலோ தனது 'மீண்டும் பள்ளிக்கு' நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக, வகுப்பறை அடிப்படையிலான கற்றலுக்கு சிறுவர்கள் மீண்டும் தம்மை பழக்கப்படுத்திக் கொள்வதற்கு உதவியாக பல செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளது. ஆரோக்கியமான தலைமுறையை வளர்ப்பதற்கு உதவும் மைலோவின் இலட்சியத்தின் ஒரு அங்கமாக, இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அனைவரினதும் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதற்கு, சிறுவர்கள் பாடசாலையில் இருக்கும்போது சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி கற்றுக்கொள்ள உதவியுள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பு வகைப்பிரிவு சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், ''கடந்த வருடங்கள் அனைவருக்கும், அதிலும் குறிப்பாக சிறுவர்களுக்கு மிகவும் சவாலாக அமைந்திருந்தது. பாடசாலைகள் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பும் நிலையில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வகையில் பாடசாலைக்கு மீண்டும் திரும்பும் இந்தத் தருணத்தை எங்கள் சிறுவர்களுக்குப் பாதுகாப்பானதாகவும் அறிவூட்டுவதாகவும் மாற்றியமைக்க நாம் விரும்புகிறோம். ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை முன்னெடுக்க சிறுவர்களை எப்போதும் ஊக்குவிக்கும் ஒரு வர்த்தகநாமமாக, புதிய இயல்புநிலையின் சவால்களுக்கு மத்தியில், சிறுவர்களை மீண்டும் பாடசாலைக்கு வரவேற்பதில் அதிகாரிகளுக்கு ஆதரவளித்து, அவர்களின் கல்வி மற்றும் விளையாட்டில் மேலும் முன்னேற அவர்களை வளப்படுத்துவதில் பங்களிப்புச் செலுத்துவது ஒரு கௌரவமாகும்,'' என்று குறிப்பிட்டார்.

சிறுவர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சுகாதார அமைச்சின் கண்டிப்பான வழிகாட்டுதலின் கீழ், 'மீண்டும் பள்ளிக்கு' நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் நிகழ்வு 2021 நவம்பர் 1 அன்று கெலிமடல கனிஷ்ட பாடசாலையில் நடைபெற்றது. பாதுகாப்பாக இருக்க தங்கள் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்து பொது சுகாதார பரிசோதகர்களால் நடத்தப்பட்ட இடைத்தொடர்பாடல் கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியுடன் நிகழ்வு ஆரம்பித்தது. சிறுவர்கள் தங்கள் தோழர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் முடிந்தவரை பாதுகாப்பான முறையில் இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கான உதவிக்குறிப்புகள் குறித்து அறிவூட்டப்பட்டது. அத்துடன் அவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிசெய்ய முகக்கவசங்கள் மற்றும் சானிடைசர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட்டன. கொவிட்-19 பரவுவதைத் தடுப்பது தொடர்பான அறிவூட்டல் சாதனங்களும் விநியோகிக்கப்பட்டன.

சிறந்த பாதுகாப்பு பழக்கவழக்கங்களை வளர்ப்பதில் இந்நிகழ்வு கவனம் செலுத்தியது மட்டுமல்லாமல், பாடசாலையிலும், வீட்டிலும் சுறுசுறுப்பு மிக்கவர்களாக இருக்கவும் சிறுவர்களை ஊக்கப்படுத்தியது. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சுறுசுறுப்பாக இருப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டி, பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர்களால் உடற்பயிற்சி அமர்வொன்றும் நடத்தப்பட்டது. இது சிறுவர்கள் வலிமையாகவும், உற்சாகமாகவும், மீதமுள்ள பாடசாலை நாட்களை சமாளிக்கவும் உதவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வர்த்தகநாமமானது எதிர்வரும் வாரங்களில் கல்வி அமைச்சு மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து மேல் மாகாணத்தில் உள்ள பல பாடசாலைகளில் இத்தகைய அமர்வுகளை நடத்தவுள்ளது.

நல்லுணவு, நல்வாழ்வு நிறுவனமான நெஸ்லே, 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் நிலைபெற்றுள்ளதுடன், நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பான மைலோ உலகின் முதற்தர* சொக்கிலேட் மோல்ற்று உணவுப் பானமாகும். விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிறைந்த மைலோ, நலச்செழுமை மிக்க பால், மோல்ற்று சாறு மற்றும் மிகச்சிறந்த கொக்கோ ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது குருநாகலில் உள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது நெஸ்லே உலகம் முழுவதும் புகழ்பெற்ற அதிஉயர் தராதரங்களை பேணிப் பாதுகாத்து வருகின்றது.

*ஆதாரம்: Euromonitor International Limited, Hot Drinks 2020 Edition, as per Malt Based Hot Drinks category definition.

---

**தொடர்புகளுக்கு**


| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |